# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1836/5 - 2013 නොවැම්බර් මස 11 වැනි සඳුදා - 2013.11.11

*1836/5 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

மத்திய மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டமையால் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தவிசாளர் ஒருவரின் பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச்சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், காமினி விஜய பண்டார எனும் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் 30 (முப்பது) நாட் காலக்கெடுவுக்குள் தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால், அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. தெல்கந்துர ஆரச்சிகே தர்மசேன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆகிய நான் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. தெல்கந்துர ஆரச்சிகே தர்மசேன என்பவர், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,<br>
கண்டி,<br>
*2013, நவெம்பர் 05.*

*11 - 883/1*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

மத்திய மாகாணத்தின் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டமையால் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

காமினி விஜய பண்டார எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திருமதி ஹெட்டி ஆரச்சிலாகே சுனேத்ரா குமாரிஹாமி என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும்;

இப்போது கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திருமதி ஹெட்டி ஆரச்சிலாகே சுனேத்ரா குமாரிஹாமி என்பவர் கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோராளை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2013, நவெம்பர் 05.

11-883/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.